முதல்வர் மு.க.ஸ்டாலின் பொறுப்பேற்ற பிறகுதான் எப்போதும் இல்லாத அளவிற்கு

# 8,406 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்பட்டு - குட முழுக்குகள் நடக்கின்றன!

## சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதில்!

**சென்னை, ஜன.11– தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (10.1.2025) வினா – விடை நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உதகமண்டலம் சட்டமன்ற உறுப்பினர் ஆர். கணேஷ், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சதாசிவம், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் சி.சீனிவாசன், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வி.முத்துராஜா ஆகியோர் எழுப்பிய வினாக்களுக்கு பதிலளித்தார்.**

**சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ்:** உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலம் லோயர் பஜார் பகுதியில் உள்ள அருள்மிகு சுப்பிரமணியர் திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் 15 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு இந்த மாதம் இறுதியில் அதாவது 31.01.2025 அன்று குடமுழுக்கு நடத்திட தேதி நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ்:** பேரவை தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இந்து அறநிலையத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியை தெரி வித்துக் கொள்கிறேன். நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், எல்க்ஹில் அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலை புனரமைத்து விரைந்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதையும், உதகை நகர் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயி லில் சிவன் சன்னதி கொடியேற்ற மண்டபம், உற்சவ மண்டபங்கள் மற்றும் தரைதளம் விரைந்து புனரமைத்து உப சன்னதிகளுக்கு குடமுழுக்கு நடத்திட ஆவன செய்யுமா என்பதை கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு ரூபாய் 27.50 லட்சம் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு 16.03.2025 அன்று குடமுழுக்கு நடத்திட நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு திருக்கோயிலான அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலுக்கு



ஒரு கோடியே 69 லட்சத்து 66 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கொடிமர மண்டபம், உப சன்னதிகள் மற்றும் அன்னதான கூடம் மராமத்து பணிகள், தரைதளம் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு 19.02.2025 அன்று குடமுழுக்கு செய்திட நாள் நிர்ணயிக்கப்பட்டி ருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கூறிய மூன்று திருக்கோயில்களும் அடுத்த மாத இறுதிக்குள் குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ்:** பேரவை தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், பாலக்குளம் கிராமம், மஞ்சக்கம்பையில் நாகராஜர் திருக்கோயில் இருக்கிறது. அதற்கு உடனடியாக அறங்காவலர்களை நியமிக்க வேண்டும். எப்போது அமைப்பீர்கள் என்று கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு தான், எந்த காலத்திலும் இல்லாத அளவிற்கு அவர் தலைமையில் உயர் மட்டக் குழு அமைத்திட்ட ஆட்சி திராவிட மாடல் ஆட்சியாகும். அதோடு மட்டுமல்லாமல் இந்த உயர்மட்டக் குழுவின் கூட்டமானது இதுவரை இரண்டு முறை அவரது தலைமையில் நடைபெற்றுள்ளது. அறங்காவலர்கள் நியமனத்தை பொறுத்த அளவில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு தான் இதுவரையில் 8,406 திருக்கோயில்களுக்கு அறங்காவலர்கள்நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை தெரிவித்து உறுப்பினர் அவர்கள் கூறிய அந்த திருக்கோயிலுக்கும் அறங்காவலர்கள் நியமிக்கப்படுவர். பிப்ரவரி மாத இறுதிக்குள் உங்களுடைய சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 7 திருக்கோயில்களில் திருப்பணிகள் முடிவுற்று குடமுழுக்கு நடத்தப்பட இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர் க. சொ.க.கண்ணன்:** பேரவை தலைவர் அவர்களே, எனது ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், இலையூர் கிராமத்தில் 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான காசி விஸ்வநாதர் திருக்கோயில் உள்ளது. இந்த கோயில் அரியலூர் மாவட்டத்திலேயே மரகதலிங்கம் உள்ள ஒரே திருக்கோயிலாகும். இக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்தித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என கேட்டு அமைகிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிய அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் மரகதலிங்கம் உள்ள திருக்கோயில் என தெரிவித்துள்ளார். சென்னை, தங்கசாலையில் இருக்கின்ற மலைக் கோட்டை திருக்கோயி லில் கூட மரகதலிங்கம் இருக்கின்றது. இப்படி தமிழ்நாட்டில் 9 திருக்கோயில்களில் மரகதலிங்கம் அமைந்திருக்கின்றது. அவர் கோரிய அருள்மிகு காசி விஸ்வநாதர் திருக்கோயில் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. தொல்லியல் குழு மற்றும் மாநில வல்லுநர் குழுவில் அனுமதிக்கப்பட்டு வரைபடத்தை சமர்ப்பிக்க சொல்லி இருக்கிறார்கள். முழுமையான வரைபடம் சமர்ப்பித்த பிறகு ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதாசிவம்:** பேரவை தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதி, மேச்சேரியில் பிரசித்தி பெற்ற சக்தி வாய்ந்த பத்ரகாளியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்து 12 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மேச்சேரி பத்ரகாளியம்மன் கோயிலுக்கு குடமுழுக்கு செய்வாரா என்று பேரவை தலைவர் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிய மேச்சேரி அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலுக்கு திருப் பணிகள் மேற்கொள்ள தொல்லியல் குழு மற்றும் மாநில வல்லுநர் குழுவின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதிக்கு பின் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர் திண்டுக்கல் சி.சீனிவாசன்:** பேரவை தலைவர் அவர்களே, அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் நேற்றைக்கு முன் தினம் திருச்சி மலைக்கோட்டை கோயிலுக்கு லிப்ட் வசதி செய்து தரப்படும் என்று மகிழ்ச்சியான செய்தியை சொன்னார்கள். எடப்பாடியார் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அறநிலையத் துறை அமைச்சராக ராமச்சந்திரன் இருக்கும் பொழுது திண்டுக்கல் மாநகரில் அமைந்துள்ள மலைக் கோட்டையில் இருக்கிற அபிராமி அம்மன் கோயிலுக்கு ரோப்கார் லிப்ட் அமைக்கின்ற திட்டம் ஏற்படுத்தியிருந்தோம். ஆனால், தொல்லியல் துறைக்கும் அறநிலையத்துறைக்கும் தமிழ்நாடு அரசுக்கும் பெரிய சண்டையாக நடந்து கொண்டிருக்கிறது. அதனால் தொல்லியல் துறை கடைசி வரை அந்தத் திட்டத்தை போட முடியாத சூழல் எங்கள் ஆட்சியில் ஏற்பட்டது. அமைச்சர் சேகர்பாபு அவர்கள் மின்னல் வேகத்தில் பணிகளை செய்து வருவதற்கு பாராட்டுக்கள். இதையும் நடவடிக்கை எடுத்து எங்கள் திண்டுக்கல் மலைக்கோட்டைக்கு ரோப்கார் வசதி அல்லது லிப்ட் வசதி செய்து தருவாரா என்று கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு தான், அய்யர்மலை, சோளிங்கர் மலை ஆகிய இரண்டு திருக்கோயில்களுக்கு ரோப்கார் வசதி முழுமை பெற்று பக்தர்கள் பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றது. மூத்த உறுப்பினர் அண்ணன் திண்டுக்கல் சீனிவாசன் அவர்கள் கூறிய அபிராமி திருக்கோயிலில் இந்திய தொல்லியல் துறை (ASI) அதற்கு உண்டான அனுமதி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. எங்கள் துறையின் செயலாளர் இந்திய தொல்லியல் துறை அலுவலர்களோடு ஏற்கனவே கலந்தாலோசனை செய்திருக்கின்றார். தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவு பெற்று இந்த மாத இறுதிக்குள் அந்த திருக்கோயிலுக்கு நானும், அமைச்சர் அண்ணன் ஐ.பெரியசாமி அவர்களும், மாவட்ட செயலாளரும் வருகின்றோம். நீங்களும் வாருங்கள். அனைத்து அலுவலர்களையும் வரவழைத்து இருக்கின்ற பிரச்சனையை உட்கார்ந்து பேசி ரோப்கார் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருந்தால் நிச்சயம் நிறைவேற்றி தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வி.முத்துராஜா:** பேரவை தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆதனக்கோட்டை ஸ்ரீ காசி விஸ்வநாதர் ஆலயம் 300 வருடங்கள் பழமையான திருக்கோயில். நீண்ட காலமாக புனரமைப்பு செய்யப்படாமல் மிகவும் சிதிலமடைந்து உள்ளது. கடந்த காலங்களில் நான்கு கால பூஜைகள் நடைபெற்று வந்தன. தற்போது ஒருகால பூஜை கூட நடைபெறாமல் உள்ளது. இந்தக் கோயிலை சுற்றியுள்ள 50-க்கும் மேற்பட்ட கிராமங்கள் திருவிழாக்கள் கொண்டாடும் ஆலயமாக திகழ்ந்தது. ஆகவே மேற்கண்ட திருக்கோயிலில் புனரமைத்து குடமுழுக்கு செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு:** பேரவை தலைவர் அவர்களே, புதுக்கோட்டை தேவஸ்தானத்தில் 227 திருக்கோயில்கள் உள்ளன. ஒருசில திருக்கோயில்களில் மட்டுமே வருமானம் வருகின்றது. மற்ற திருக்கோயில்களில் எல்லாம் ஒருகால பூஜைக்கு கூட நிதி இல்லாத சூழல் இருந்தது. இதனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றவுடன் புதுக்கோட்டை தேவஸ்தானத் திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் ஆறு கோடி ரூபாயை அரசின் சார்பில் மானியமாக வழங்க உத்தரவிட்டு வழங்கினார். ஆகவே சிறு சிறு கோயில்களில் கூட தீபங்கள் எரியாது இருந்த நிலை மாறி தற்போது தீபங்கள் எரிந்து கொண்டிருக்கின்றன. பணியாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் மாத வருமானம் என்று இருந்த நிலை மாறி பத்தாயிரம் ரூபாய் அளவிற்கு தற்போது ஊதியம் வழங்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. உறுப்பினர் அவர்கள் கோரிய அந்த திருக்கோயிலை இன்று ஆய்வு செய்து, நாளைக்குள்ளாக எப்போது புனரமைப்பு பணி மேற்கொள்ளப்படும் என்றும், எப்போது முடிவுற்று குடமுழுக்கு நடத்தப்படும் என்பதனையும் தெரிவிக்கப்படும் என்பதனை பேரவைத் தலைவர் வாயிலாக உறுப்பினருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உறுப்பினர்களின் கேள்விக்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்தார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.1 2025) நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற யுமாஜின் 2025 தகவல் தொழில்நுட்ப மாநாட்டின் நிறைவு விழாவில் காணொளி காட்சி வாயிலாகப் பங்கேற்று சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ஒன்றிய தொலை தொடர்புத் துறை செயலாளர் நீரஜ் மித்தல், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு (DRDO) விஞ்ஞானி டாக்டர். சந்திரிகா கௌசிக், இந்திய தொழில்நுட்பக் கழக ஆராய்ச்சி பூங்கா (IIT MRP) தலைமைச் செயல் அலுவலர் நடராஜன் மல்லுபிள்ளை, இந்திய தொழிற் கூட்டமைப்பு தமிழ்நாடு (CII TN) தலைவர் ஸ்ரீவட்ஸ் ராம், எஸ்காட் மேலாண்மை இயக்குநர் (பொ) திருமதி. ரமண சரஸ்வதி, மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

காங்கிரஸ் கட்சி போட்டியிடாது!

# ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கழக வெற்றிக்குப் பாடுபடுவோம்!

## தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஜன.11- ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி போட்டியிடாது என்றும், அத்தொகுதியில் இந்தியா கூட்டணியின் சார்பாக போட்டியிடும் தி.மு.கழக வேட்பாளரின் வெற்றிக்காக பாடுபடுவோம் என்றும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வருகின்ற பிப்ரவரி



5ஆம் தேதி இடைத்தேர்தல் வரவிருப்பதை நாம் அனைவரும் அறிவோம், இந்த தொகுதியில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஈ.வெ.கி.ச. இளங்கோவன் அவர்கள் மறைவு அடைந்ததையொட்டி இடை தேர்தல் வரவிருக்கிறது.

2026 சட்டமன்ற பொது தேர்தலுக்கு இன்னும் 10 மாதங்களே உள்ள நிலையில், முதல் அமைச்சர் மற்றும் இந்தியா கூட்டணியின் தமிழ்நாட்டின் தலைவராக விளங்கி கொண்டிருக்கும் மு.க. ஸ்டாலின் அவர்கள், முதல் முறையாக கேட்டுக்கொண்டதற்கு இணங்க அகில இந்திய காங்கிரஸ் தலைமை மற்றும் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையின் தீவிர ஆலோசனைக்குப் பிறகு நாங்கள் அனைவரும் ஒரு மனதாக ஏற்றுக்கொண்டு, இந்தியா கூட்டணியின் சார்பாக ஈரோடு கிழக்கு தொகுதியின் இடைத்தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் போட்டியிடுவார் என்று இன்று உறுதிசெய்யப்பட்டது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தை பாதுகாக்க நாட்டில் ஜனநாயகம் மலரச்செய்ய நாம் அனைவரும் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளரை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்வோம்.

இவ்வாறு தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பல்கலைக் கழக மாணவி விவகாரம்: அரசு நடவடிக்கைக்கு எதிராக

# பொது வெளியில் பேசுவது சட்டத்திற்குப் புறம்பானது!

## சட்டப்பேரவை வளாகத்தில் ஆர்ப்பாட்டத்திற்குப் பின் இ.பரந்தாமன் பேட்டி!

சென்னை, ஜன.11 சட்டப்பேரவையில் வினாக்கள் விடை நேரத்தில் வெளியே வந்த தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் பரந்தாமன், தாயகம் கவி உள்ளிட்ட தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள், இவன்தான் அந்த சார் என்று அதிமுகவின் முன்னாள் நிர்வாகி ஒருவரின் (சுதாகர்) புகைப்படத்தையும் எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமியின் புகைப்படத்தையும் அடங்கிய போஸ்டர்களை காட்டி முழக்கமிட்டனர்.

பின்னர் செய்தியாளர் சந்திப்பில் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் பேசியதாவது :-

பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்திற்கு புலன் விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, விசாரணையில் சொல்லப்பட்ட வார்த்தையை வைத்துக் கொண்டு அதிகாரிகள் மீதும் ஆட்சியாளர்கள் குறிவைத்து பொது வெளியில் பேசுவது



சட்டத்திற்கு புறம்பானது.

யார் அந்த சார் என பேட்ஜ் அணிந்து கொண்டும் கருப்பு சட்டை அணிந்து கொண்டும் அதிமுகவினர் சட்டப்பேரவைக்கு வந்து கொண்டிருந்தார்கள்.

நாங்களும் போனால் போகட்டும் என்று இருந்தோம் ஆனால் அவர்களின் கேள் விக்கு அரசும் பிரதிநிதிகளும் பதில் சொல்ல வேண்டிய தேவை உள்ளது.

அதனால் தான் பாவம் பார்த்து 'யார் அந்த சார் என்ற கேள்விக்கு இவன் தான் அந்த சார் பதில் சொல்லி இருக்கிறோம்" என்றார்.

புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் துணை முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

## மாநகராட்சிப் பள்ளி மாணவ – மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## வி.ஆர்.குப்பன் தலைமையில் வழங்கப்பட்டது!

சென்னை, ஜன. 11- சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில், 23 அ வட்டத்தில் அடங்கிய சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா காவாங்கரை கே. எஸ். நகர் பகுதியில் நடைபெற்றது.

23 அ வட்டச் செயலாளர் வி. ஆர் .குப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு புத்தகம், தேர்வு எழுத அட்டை, பென்சில், பேனா, ரப்பர் போன்ற பொருட்களை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார்.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தலைமை ஆசிரியர் பெற்றோர் சங்க நிர்வாகிகள் ஆசிரிய பெருமக்கள் என பல திரளாக கலந்து கொண்டார்கள்.

இந்த நிகழ்வில் வட்ட நிர்வாகிகள் ஏ. ராமச்சந்திரன், எம். உசேன் மைதீன், ஹரி, பார்பன், முத்து கிருஷ்ணன், பார்த்திபன், அப்துல் சமது, லாரன்ஸ், ஜவகர், மாவட்டம் மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அம்மு மூர்த்தி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆர். சுதா, வையலட்ராணி, கலைச்செல்வி, ஜெயபாரதி, லிங்கேஸ்வரி, உள்ளிட்ட பலர்கலந்து கொண்டார்கள்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நலத்திட்ட உதவிகள் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழகத்தினருக்கும், பெற்றோர் ஆசிரியர் சங்க நிர்வாகிகளும், தலைமை ஆசிரியரும் தனது நன்றியினை தெரிவித்து கொண்டார்கள்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.



மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நிகழ்ச்சி ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு 23 அ வட்டத்திற்குட்பட்ட சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, வட்டச் செயலாளர் வி .ஆர் .குப்பன் தலைமையில் நடைபெற்றது. பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகம், தேர்வு அட்டை, பென்சில், பேனா, ரப்பர் ஆகியவற்றை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வழங்கினார். நிகழ்ச்சியில் நிர்வாகிகள் எ. இராமச்சந்திரன், எம். உசேன் மொய்தீன், ஹரி, பார்பன், முத்துகிருஷ்ணன், பார்த்திபன், அப்துல் சமது, லாரன்ஸ், ஜவகர், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் அம்மு மூர்த்தி, ஆர். சுதா, வயலட் ராணி, கலைச்செல்வி, ஜெயபாரதி, லிங்கேஸ்வரி உள்ளிட்ட நிர்வாகிகள், ஆசிரியர்கள் திரளாக கலந்து கொண்டார்கள்.



கழக இளைஞரணி செயலாளரும் துணை முதல்வருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் மற்றும் பொங்கல் விழாவை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் ராஜா அன்பழகன் எம்.சி. தலைமையில் தியாகராயநகர் 141வது வார்டில் உள்ள 141வது,141(அ) வட்டத்தை சேர்ந்த கழக உடன்பிறப்புகளுக்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. நலத்திட்ட உதவிகள் வழங்கினார். நிகழ்ச்சியில் பகுதி செயலாளர்கள் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., கே.ஏழுமலை எம்.சி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஜெ.ஜானகிராமன், வட்ட செயலாளர்கள் என்.துரை, எஸ்.லட்சுமிகாந்தன், கோ.உதயசூரியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உத்தரவுப்படி தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆணைக்கிணங்க அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, ஆகியோர் ஆலோசனை ப்படி திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் தொகுதிக்குட்பட்ட கடம்பத்தூர் பகுதியில் தூய்மைப் பணியாளர்களுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் வி.சி.ஆர்.குமரன் ஏற்பாட்டில் பொங்கல் பரிசு வழங்கி வாழ்த்துக் கூறினார். உடன் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.